IN THE COURT OF PRINCIPAL DISTRICT JUDGE, SALEM.

Probate O.P.No.71/2021

PW-3 is solemnly affirmed on 10.08.2023 in accordance with the provisions of the Oaths Act No.44 of 1969.

| | | | |
|---|---|---|---|
| Name | : சரவணகுமார் | Caste | : |
| S/o.W/o.D/o. | : கந்தசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

<u>முதல் விசாரணை;</u>

நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை எனது வழக்கறிஞருக்கு நான்தான் சொன்னேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

1. என்னுடைய ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிட்டு சரி பார்க்கப்பட்டது. மேற்படி ஆவணம் ம.சா.ஆ.13 ஆகும்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

மனுதாரரை எத்தனை வருடமாக தெரியும் என்றால் 10 ஆண்டுகளாக தெரியும். வழக்கில் தாக்கல் செய்துள்ள உயில் ஆவணத்தை நான்தான் தயார் செய்தேன் என்றால் ஆம். உயிலில் எந்த ஒரு சொத்தும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆவணம் எழுதும்போது சொத்து விவரம் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் என்றால் அதுபற்றி தெரியாது. இந்த உயில் ஆவணம் நான் சொன்ன தேதியில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மனுதாரரின் கணவர் ஜெயகுமாரின் இறப்பிற்கு முன்பே இந்த உயில் ஆவணம் எழுதப்பட்டுவிட்டது என்றால் சரிதான். மனுதாரரின் வேண்டுகோளுக்கிணங்க நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,

Principal District Judge, Salem.